12-20 மணி—12 மணி நேரத்திற்குள்ளாக உடனடியாக நடவடிக்கை எடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) மின்னலைவிட வேகமாக, (மேசையைத் தட்டும் ஒலி) 'தானே' புயலாக விரைந்து நடவடிக்கை எடுத்து அறிவிப்புச் செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நித்தம் நித்தம் புதிய அறிவிப்புகள் தந்திட்டார் நம் அன்னை. இன்றைக்கு மூன்று, நான்காகி உள்ளது. அத்தனையும் நல் முத்துக்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்ன கொடுப்பார், எதைக் கொடுப்பார் என்று மக்கள் எண்ணும் முன்பே, பொன்னும் கொடுப்பார், பொருளும் கொடுப்பார், எல்லாம் கொடுப்பார். எல்லாம் கொடுப்பார் நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) போதும் போதும் எனச் சொன்னாலும், இன்னும் கொடுப்பார், இவையோடு போதும் என்றாலும் இன்னும் கொடுத்துக்கொண்டே இருப்பார் நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) முத்தான நான்கு அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி நிருவாகிகளின் வீடுகள்மீது பெட்ரோல் குண்டு வீச்சு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தூத்துக்குடி மாவட்டத்தில் தெய்வச்செயல்புரம் கிராமத்தில் நில மோசடியை எதிர்த்துப் போராடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களின் வீடுகள்மீது பெட்ரோல் குண்டுகள் வீசிய சமூக விரோதிகளைக் கைது செய்ய வலியுறுத்தி நடைபெறும் போராட்டம் குறித்து, திருவாளர்கள் அ. சவுந்தரராசன், கே. பாலகிருஷ்ணன் விதி 55-இன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். பேரவையில் நேற்று இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் இப்பிரச்சினை குறித்து எழுப்ப முயன்றபோது, பிரச்சினையை எடுக்கின்றேன் எனத் திரும்பத் திரும்பத் தெரிவித்த பின்னரும் அவர்கள் வெளிநடப்புச் செய்தனர். இருப்பினும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தங்கள் ஜனநாயகக் கடமையைச் சிறப்புறச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் உயரிய நோக்கத்தினால், இன்று இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளவிருக்கின்றேன். இனிமேல் இவர்கள் இதுபோன்ற பிடிவாதப் போக்கினைக் கைவிட வேண்டுமென்று*

2012 மே 10] [பேரவைத் தலைவர்]
கேட்டுக்கொண்டு, இப்பிரச்சினையை இப்போது எடுத்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் பேசுகிறீர்களா அல்லது திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், தெய்வச்செயல்புரம் கிராமத்தில் 915 ஏக்கர் நிலத்தை சிலபேர் மோசடியாக பட்டா பெற்றிருக்கிறார்கள். அதை எதிர்த்துப் போராடிய எங்கள் கட்சியின் தலைவர் கனகராஜ் வீட்டில் 4 மாதங்களுக்கு முன்னால் பெட்ரோல் பாட்டில் வீசப்பட்டது. அதேபோன்று, கோவில்பட்டி நகரத்திலே இருக்கிற ஹாக்கி மைதானத்தை சிலர் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தபோது அதை எதிர்த்துப் போராடி, அதை அந்த ட்ரஸ்டிக்கு, அந்த மக்களுக்குப் பயன்படுகிற மைதானமாக நீடிக்க வேண்டுமென்று போராடிய காரணத்தினால், சமூக விரோதிகள் எங்களுடைய கட்சியினுடைய செயலாளர் தோழர் சீனிவாசன் வீட்டில் 45 நாட்களுக்கு முன்னாலே பெட்ரோல் பாட்டிலை வீசி, அவரின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு வழக்குகளிலேயும் F.I.R. போடப்பட்டும் அங்கே யாரும், எந்த குற்றவாளியும் கைது செய்யப்படாத நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில்தான் இந்தப் பேரவையிலே இதை ஒரு அவசர நிகழ்வாக எடுத்துக்கொண்டு விவாதித்து, அவர்களைக் கைது செய்ய வேண்டும்; அந்த வழக்கை முறையாக நடத்துவதற்கு முயற்சிக்க வேண்டுமென்ற அடிப்படையில், கடந்த 3 நாட்களாக காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்ததையும் கவனத்தில் கொண்டுவரவேண்டும் என்கிற அடிப்படையிலேதான், இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்க வேண்டுமென்கிற முறையிலே நான் இதைத் தெரிவித்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், தெய்வச்செயல்புரம் பகுதியில், சீவலப்பேரி சத்திரத்திற்குச் சொந்தமான நிலங்களை கிராமவாசிகள், பல வருடங்களாக அனுபவித்து வந்தனர்.

சீவலப்பேரி சத்திரம் சார்பாக மேடை திருமலையப்ப தளவாய் முதலியார் என்பவர் சத்திரத்திற்குச் சொந்தமான சில நிலங்களை திரு. பேச்சிமுத்து மற்றும் ஆறு நபர்களுக்குக் கிரையம் செய்து கொடுத்துள்ளார். கிரையம் பெற்ற நபர்களுக்கு ஆதரவாக, வழக்கறிஞர் செல்வம் மற்றும் சிலர் ஒரு தரப்பினராகவும், மேற்படி நிலங்களை அனுபவித்து வரும் விவசாயிகள், விவசாயிகளுக்கு ஆதரவாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் திரு. கனகராஜ் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் மற்றொரு தரப்பினராகவும் செயல்பட்டு வந்தனர்.

பிற்பகல் 12-25

இந்தச் சூழ்நிலையில், தெய்வச்செயல்புரத்தைச் சேர்ந்த சரஸ்வதி அம்மாள் என்பவர் தங்கள் நிலத்தில் அமைக்கப்பட்ட முள்வேலியை, செல்வத்தின் ஆதரவாளர்கள் திருடிச் சென்றுவிட்டதாகக் கூறி தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன் பேரில், வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. செல்வத்திற்கு ஆதரவாக தூத்துக்குடியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள், நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தபோது, 6-1-2012 அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தூத்துக்குடி மாவட்ட முன்னாள் செயலாளர் கனகராஜ் மற்றும் அவரது கட்சியினர் நீதிமன்ற வளாகத்திற்குள் செல்வத்திற்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்தனர்.

இதனையடுத்து, வழக்கறிஞர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இரு பிரிவினரும் அளித்த புகாரின் பேரில், தூத்துக்குடி தெற்கு காவல் நிலையத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த மோதலில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தரப்பில் காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் சென்றபோது, அங்கும் செல்வம் குழுவினர் வந்து தாக்கியதாகக் கொடுத்த புகாரின்பேரில், மேலும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதற்கு எதிராக வழக்கறிஞர்கள் சார்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர்மீது கொடுக்கப்பட்ட புகாரின் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் 6-1-2012 அன்று, இரவு சுமார் 10-45 மணிக்கு, இரு சக்கர வாகனத்தில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள்

2012 மே 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இருவர் கனகராஜின் வீட்டின் முதல் தளத்தை நோக்கி பெட்ரோல் நிரப்பிய பாட்டிலை வீசியதாகவும், அந்தப் பாட்டில் வீட்டின் ஜன்னல்மீது பட்டு உடைந்ததன் விளைவாக தனக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும் கனகராஜின் மனைவி விஜயா கொடுத்த புகாரின்பேரில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது புலன் விசாரணையில் உள்ளது.

இந்தச் சம்பவத்தில் வழக்கறிஞர்களைக் கைது செய்யக் கோரி 11-1-2012 அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் மாநிலத்தின் பல இடங்களில் ஆர்ப்பாட்டம் செய்தனர். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில, மாவட்ட மற்றும் சார்பு நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 12-1-2012 அன்று மாநிலம் முழுவதும் நீதிமன்றங்களைப் புறக்கணித்தனர்.

இதற்கிடையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் கோவில்பட்டி நகரச் செயலாளர் திரு. சீனிவாசன் 24-3-2012 அன்று கோவில்பட்டி மேற்கு காவல் நிலையத்தில் அளித்த புகாரில், அதிகாலை சுமார் 1-30 மணியளவில் அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் பெட்ரோல் நிரப்பிய இரண்டு கண்ணாடி புட்டிகளை தீ வைத்து தனது வீட்டின்மீது வீசியதாகவும், கோவில்பட்டி நகரில் பொதுமக்கள் பயன்படுத்தும் குப்புசாமி நாயுடு மெமோரியல் டிரஸ்டிற்குச் சொந்தமான ஹாக்கி மைதானத்தை, மகாலட்சுமி ரியல் எஸ்டேட் உரிமையாளர்கள் சந்திரசேகரன் மற்றும் பழனிச்செல்வம் ஆகியோர் வீட்டுமனைகளாக மாற்றி, விற்பனை செய்வதை எதிர்த்து, தான் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததையடுத்து, நீதிமன்றம் பொதுமக்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கியதால், ஆக்கிரமிப்பாளர்களுக்கும் தனக்கும் முன்விரோதம் இருந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்கக் கோரியதன்பேரில், குற்ற எண் 107/2012 under Section 3 of Indian Explosive Substances Act-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கும் புலன் விசாரணையில் உள்ளது.

திரு. கனகராஜ் தற்போது சென்னையில் வசித்து வருகிறார். அவர் தூத்துக்குடி செல்லும் சமயங்களில் அவருக்கு காவல் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல் சீனிவாசனுக்கும் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது இந்த வழக்கில் எதிரிகளைக் கைது செய்யக் கோரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் சுமார் 300 பேர், தூத்துக்குடி ஆட்சியர் அலுவலகம் அருகில் 7-5-2012 அன்று உண்ணாவிரதம் தொடங்கினர். 9-5-2012 அன்று இது தொடர்பாக உண்ணாவிரதம் இருந்தவர்களுடன், எனது உத்தரவின்பேரில் மாவட்ட அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதில், நிலங்கள் தொடர்பாக நீதிமன்ற உத்தரவுக்கு ஏற்ப சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், தூத்துக்குடி மற்றும் கோவில்பட்டியில் பெட்ரோல் பாட்டில்கள் வீசப்பட்ட வழக்குகள் மேல் விசாரணைக்கு குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றுவதற்கு பரிந்துரை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டதன்பேரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

இந்த இரண்டு வழக்குகளும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

பிற்பகல் 12-30

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை*